வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 18 of 2019

வழக்கு சாட்சி - PW -4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மயில்சாமி | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | முத்துசாமி | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 28.01.2026.

( எதிரி ஆஜர்).

**முதல்விசாரணை :** **நாள் : 28.01.2026.**

1) நான் தற்போது சிலை தடுப்பு பிரிவிர் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வுபெற்று தாராபுரத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 30.11.2017 ஆம் தேதி பல்லடம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நிலையப்பொறுப்பு அலுவலில் இருந்தபோது காலை 08.15 மணிக்கு நீலகிரி மாவட்டம் பந்தலூர் நெல்லியாளம் உப்பட்டியை சேர்ந்த ஆண்டனி மகன் அலெக்ஸ்டாண்டர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் அடிப்படையில் பல்லடம் காவல் நிலைய குற்ற எண்.1011/2017 சட்டப்பிரிவுகள் 279,304(A) இதச -வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும். அசல் முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் புகாரினை இணைத்து கனம் நீதிமன்ற நடுவருக்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

புகாரை யார் எழுதிகொடுத்தது என்றால் புகார் தாரர் அவரே கைப்பட எழுதிக்கொடுத்தார். 30.11.2017 அன்று பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை 4 நாட்கள் காலதாமதமானதாக நீதிமன்றத்திற்கு அனுப்பட்டது என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதிகாரி தான் உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பவேண்டியது என்று சொன்னால் சரிதான். இந்த புகாரை புகார்தாரர் எழுதிக்கொடுக்வில்லை என்று சொன்னாலும் நானோ தயார் புகார் வெறும் கையொப்பம் மட்டும் புகார்தாரிடமிருந்து பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில் புகார் தயாரிக்கப்பட்வில்லை என்றாலும் அதனால்தான் காலதாமதமானதாக முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.01.28 18:58:23 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.